சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :04.02.2025
வா.சா.1 – பாப்பா W/o பொன்னம்பலம்
OS No.164/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் இந்த வழக்கை எத்தனை சொத்திற்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் 55 செண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞருக்கு வழக்கு விபரம் கூறியதும், முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் கூறியதும் நான் தான். நான் 55 செண்டிற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 03.02.1979ம் ஆண்டே என் தகப்பனார் முத்தையா, மற்றும் சகோதரர்கள் மகாலிங்கம், ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து பாகபத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார்கள் என்றால் அது பொய்யாகும், அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் அந்த ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், எனக்கு சொத்து கொடுக்கிறேன் என்று கூறிக்கொண்டே இருந்தார்கள், ஆனால் கொடுக்கவில்லை. அ.வ.எண்.265/2011 என்ற எண்ணில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூரில் சர்வே எண்.299/4B2, 299/5, 299/15B ஆகிய 3 சொத்துக்களை பொறுத்து வாதியாகிய நான் இந்த வழக்கின் 2 வது பிரதிவாதியான ஜெயம் என்பவருக்கு எதிராகவும், என் தகப்பனார் முத்தையாவுக்கு எதிராகவும் தாக்கல் செய்து அந்த வழக்கு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.265/2011 வழக்கில் 03.02.1979ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாக்கல் செய்யவில்லை அதன்பிறகு தான் அதை பற்றி தெரிந்து கொண்டேன். எப்போதிலிருந்து என் தகப்பனாரிடம் பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்டேன்

என்றால் எனக்கு நினைவில்லை, மறந்துவிட்டேன். என்னுடைய வழக்கின் 6வது பத்தியில் மேற்படி பாகபத்திரம் குறித்து கேட்ட போது பின்னால் தருவதாக கூறினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அமிர்தம் திருமணம் முடித்து கொடுக்கும் போது அவருக்கு சொத்து கொடுத்ததாக வழக்குரையில் 4வது பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கான விஸ்தீரணம் அது எங்கு இருக்கிறது என்பது பற்றி தெரியுமா என்றால் கொட்டானிப்பட்டியில் உள்ளது. அளவு தெரியவில்லை. 1ம் பிரதிவாதிக்கு சொத்தை சீதனமாக கொடுத்தார்கள் என்பதை நிருபிக்க ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் யார் யார் பெயரில் உள்ளது என்பது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தகப்பனார் சுயநினைவில்லாமல் இருந்த காலத்தில் 2வது பிரதிவாதி ஜெயம் எழுதி வாங்கிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன் அதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. அ.வ.எண்.265/2011 தாக்கல் செய்யும் போது என் தகப்பனார் முத்தையாவை 1ம் பிரதிவாதியாக சேர்த்திருக்கிறேன் என்றால் நினைவில்லை. என் தந்தை இறப்பதற்கு முன்பாக சுயநினைவுடன் நன்றாக தான் இருந்தார். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியான ஜெயம் சர்வே எண்.299/4B2, 299/5, 299/15B சொத்துக்களில் சர்வே எண்.299/5பொறுத்து மட்டும் எனக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூரில் விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கும், அ.வ.எண்.214/2011 என்ற வழக்கில் 2ம் பிரதிவாதி ஜெயத்திற்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் இல்லை. அந்த வழக்கில் இருந்து மேல்முறையீட்டு வழக்கு AS 10/2023 என்ற வழக்கானது தற்போது வரை இதே நீதிமன்றத்தில் இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கு நடைமுறைகள்

எல்லாம் என் தம்பி ராஜேந்திரனின் பிள்ளைகளுக்கு தான் தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே கொடுத்துள்ள இந்த வழக்கில் கொடுத்துள்ள அறிவிப்பானது அ அட்டவணை சொத்துக்களில் 3 இன சொத்துக்களும், ஆ பட்டியலில் உள்ள சொத்துக்களில் 51 இன சொத்துக்களும் குறிப்பிட்டு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கானது 48 இன சொத்துக்களுக்கு மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என் தம்பி ராஜேந்திரன் குடும்பத்திற்கு ஆதரவாக பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 3 இலக்க சொத்துக்களை பொறுத்து நான் 2011ம் ஆண்டே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூரில் OS 265/2011 வழக்கினை தாக்கல் செய்துள்ளபடியால் இந்த வழக்கானது முரண்பட்டு, முரண்தடையாக உள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை உண்டு என்று 1989ம் ஆண்டு தமிழக அரசு சட்டம் இயற்றியுள்ளது என்றும், மத்தியஅரசானது இந்தியா முழுவதுமாக 2005ம் ஆண்டு பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை உள்ளது என்று சட்டம் இயற்றியுள்ளது என்றும், ஆனால் என் தந்தை முத்தையா மற்றும் சகோதரர்கள் ஏற்படுத்திகொண்ட பாகபிரிவினை பத்திரமானது 03.02.1979 தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த பாகபிரிவினையை பொறுத்து எனக்கு பாகம் கேட்க உரிமையற்றுபோய்விட்டது என்று சொன்னல் சரியல்ல. அதேபோல் மேற்படி பாகபத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்யாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளபடியால் அந்த வகையில் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும், என்னுடைய அப்பா இந்த வழக்கில் 6வது பிரதிவாதியான முல்லைசெல்வன் என்பவருக்கு வழக்குஅறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள47 முதல்

51 இலக்க சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதை நான் இந்த வழக்கில் செல்லாது என்று அறிவிக்ககோரி விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.04 16:16:38 +0530

Sub Judge

Melur